செ.வெ.எண் : 21/ ஏப்ரல் நாள் : 12.04.2019

## இராமநாதபுரம் மாவட்டம்

## டாக்டர்.ஏ.பி.ஜே.அப்துல்கலாம் அவர்களின் தேசிய நினைவகம் அருகே வாக்காளர் விழிப்புணர்வு நடவடிக்கையாக மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக சுமார் 500 மீட்டர் நீளத்தில் 51 மணல் சிற்பங்கள் அமைக்கப்பட்ட நிகழ்வு

## High Range Book of World Records அமைப்பின் மூலம் "The Lengthiest Gallery of Sand Sculptures On Voters Awareness" என சாதனை நிகழ்வாக அங்கீகாரம்

நாடாளுமன்ற மக்களவை பொதுத்தேர்தலை முன்னிட்டு இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம், பேய்க்கரும்பில் அமைந்துள்ள டாக்டர்.ஏ.பி.ஜே.அப்துல்கலாம் அவர்களின் தேசிய நினைவகம் அருகே இன்று (12.04.2019) வாக்காளர் விழிப்புணர்வு நடவடிக்கையாக சுமார் 500 மீட்டர் நீளத்திற்கு (1/2 கி.மீ) வாக்காளர் விழிப்புணர்வை வலியுறுத்தும் விதமாக 51 மணல் சிற்பங்கள் அமைக்கப்பட்டிருந்த நிகழ்வினை High Range Book of World Records அமைப்பின் மூலம் "The Lengthiest Gallery of Sand Sculptures On Voters Awareness" என சாதனை நிகழ்வாக அங்கீகரிக்கப்பட்டு, சான்றிதழ் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில், மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள், இராமநாதபுரம் பாராளுமன்ற தொகுதிக்கான தேர்தல் பொது பார்வையாளர் திரு.நரேந்திரசிங் பர்மார்,இ.ஆ.ப., அவர்கள், பரமக்குடி சட்டமன்ற தொகுதி இடைத் தேர்தலுக்கான பொது பார்வையாளர் திரு.ஆனந்த் ஸ்வரூப்,இ.ஆ.ப., அவர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

நாடாளுமன்ற மக்களவை பொதுத்தேர்தலை முன்னிட்டு மாவட்ட நிர்வாகத்தின் மூலம் பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக, 100 சதவீத வாக்குப்பதிவு, என் வாக்கு விற்பனைக்கு அல்ல, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் வாக்காளர் சரிபார்க்கக்கூடிய இயந்திரம் ஆகியவற்றின் செயல்பாடு குறித்த விழிப்புணர்வு ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டு வாக்காளர் விழிப்புணர்வு பணிகள் நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் இன்றைய தினம் இராமேஸ்வரம் பேய்க்கரும்பில் அமைந்துள்ள டாக்டர்.ஏ.பி.ஜே.அப்துல்கலாம் அவர்களின் தேசிய நினைவகம் அருகே வாக்காளர் விழிப்புணர்வை வலியுறுத்தும் விதமாக சுமார் 50மீ நீளத்தில் (1/2 கி.மீ) தேர்தல் தொடர்பான தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்கள், வாக்குரிமையின் வலிமை போன்றவற்றை வலியுறுத்தும் விதமாக 51 மணல் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, மக்களாட்சி தத்துவத்தின் சிறப்பினை எடுத்துரைக்கும் பண்டைய சோழர் கால குடவோலை முறை, வாக்குரிமையின் வலிமை, அழியா மையின் ஆற்றல், 100 சதவீத வாக்குப்பதிவு, எங்கள் வாக்கு விற்பனைக்கு அல்ல, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் வாக்காளர் சரிபார்க்கக்கூடிய இயந்திரம் ஆகியவற்றின் செயல்பாடு குறித்த விழிப்புணர்வு, மாற்றுத்திறன் கொண்ட வாக்காளர்கள் சிரமமின்றி வாக்களித்திட ஏதுவாக சிறப்பு வசதிகள் உள்ளிட்ட பல்வேறு விசயங்களை வலியுறுத்தும் வகையில் மணல் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்வினை High Range Book of World Records அமைப்பின் மூலம் "The Lengthiest Gallery of Sand Sculptures On Voters Awareness" என சாதனை நிகழ்வாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது என தெரிவித்தார்.

தொடர்ந்து, மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நிகழ்ச்சியில் பங்கேற்ற மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள், மீனவர் குழு உறுப்பினர்கள் அனைவரும் வாக்காளர் விழிப்புணர்வு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.த.கெட்சி லீமா அமலினி, இந்திய கடலோர காவல்படை கமாண்டர் திரு.எம்.வெங்கடேஷ், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் திரு.கோ.குருநாதன், ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் திருமதி.சிவகாமி, ஊராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.கேசவதாசன், மணல் சிற்பங்களை அமைத்த கலையூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி ஆசிரியர் திரு.பா.சரவணன், High Range Book of World Records அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் திருமதி.சைலஜா மஹாதேவன் உட்பட அரசு அலுவலர்கள், பொதுமக்கள், மகளிர் சுய உதவிக்குழு, மீனவக்குழுக்களைச் சார்ந்த உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**